1969 செப்டம்பர் 11]

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஐயா, இந்த எலும்பு உருக்கி நோய் சம்பந்தமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போனால், அங்கே பத்துப் படுக்கைகள், இருபது படுக்கைகள்தான் இருக்கின்றன என்ற நிலையில், " இடம் இல்லை " என்று நோயாளிகள் வெளியே அனுப்பப் படுகிறார்கள். முக்கியமாக ஏழை மக்கள் இதனால் மிகவும் அல்லலுறுகிறார்கள். ஆகவே, ஜில்லாதோறும் உள்ள பெரிய ஹெட்க் வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும், தாலுக்காத் தலைநகர ஆஸ்பத்திரிகளிலும் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி, எலும்பு உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றி ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா? அப்படியானால் அது எந்த முறையில் இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எலும்பு உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் படுக்கை வசதி செய்வது போதுமானது என்று கூறுவதற்கில்லை. ஆனால், படுக்கை வசதிகளை மாவட்ட மருத்துவ மனைகளில் அதிகரிக்கும் செயற்குறிப்பு இருக்கிறது. நிதி நிலை நெருக்கடியின் காரணமாகத்தான் கட்டடங்கள் கட்டுவதுபோன்ற வேலைகள் எடுக்கப் படாமல் இருக்கின்றன. முறைப்படி ஆராயப்பட்டு அவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

Private practice by Government doctors

* 193 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government have any proposal to prohibit private practice by Government doctors?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அப்படி ஒரு திட்டம் இல்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, பெரும்பாலும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கின்ற டாக்டர்கள் தனியாகவும் தொழில் செய்வதால், அங்கே வருகின்ற நோயாளிகளுக்குத் தங்கள் வீட்டுக்கு வந்து கன்ஸல்டேஷன் செய்துகொண்டால்தான் ஆஸ்பத்திரியில் ஒழுங்காக ட்ரீட்மென்ட் செய்கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, அந்தக் குறையைப் போக்குவதற்காக அரசு உடனடியாக அரசாங்க டாக்டர்கள் தனியாகத் தொழில் செய்வதைத் தடை செய்ய முன்வருமா? இது போன்று மற்ற மாநிலங்களில் தடை செய்து இருக்கின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி இருவிதக் கருத்துக்கள் இருந்து வருகின்றன. இது அவ்வப்போது ஆராயப்பட்டும் வருகின்றது. ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையில், அண்மையில் அவர்கள் ப்ரைவேட் ப்ராக்டிஸ் செய்யக்கூடாது என்று சொல்லி, ஊதிய உயர்வு தந்து,

வைத்து இருக்கிறார்கள். இங்கே அதுபற்றி 1963-64-ம் ஆண்டில் ஆராயப்பட்டு அது கைவிடப்பட்டுவிட்டது. ப்ரைவேட் ப்ராக்டிஸ் செய்யக்கூடாது என்று சொல்லி, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஊதியம் தந்துவிடுவதன் மூலமாக மிகச் சிறந்தவர்களுடைய பணிகளைப் பொது மருத்துவ மனை பெறமுடியாமல் போய்விடும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரசாங்க மருத்துவ மனையை விட்டுவிட்டுத் தனியாகவே ப்ராக்டிஸ் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். குறிப்பிட்ட ஏதாவது ஊதிய உயர்வு பெறக்கூடியவர்கள்மட்டுந்தான் இத்தகைய மருத்துவ மனையில் இருப்பார்கள் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, முழுவதுமே எல்லா மருத்துவ வல்லுநர்களுக்கும் ப்ரைவேட் ப்ராக்டிஸை அனுமதிக்காமல், ஓரளவு ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பது என்று 1963-64-ம் ஆண்டு சிந்திக்கப்பட்டு, கல்வி பயிற்றுவிக்கும் நிலையங்களில்மட்டும் 13½ இலட்ச ரூபாய் அதிகம் ஆகும் என்றும், எல்லா வகைகளுக்கும் செய்யவேண்டும் என்றால் 20 லட்சம் ரூபாய் அதிகம் ஆகும் என்றும் கணக்கிடப்பட்டது. இப்பொழுது ஆந்திர மாநிலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறபடியால், அதனுடைய குறிப்புகளை அரசு வரவழைத்து, இப்பொழுது மருத்துவத் துறை இயக்குநர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய அறிக்கை வந்தபிறகு மேலும் இந்த அரசு அதுபற்றி ஆராயும்.

திருச்சியில் தமிழ்ப் புலவர் கல்லூரி

*194 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சியில் ஒரு தமிழ்ப் புலவர் (வித்வான்) கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி மாவட்டத்திலிருந்து இந்த ஆண்டு ஏராளமான மாணவர்கள் திருவையாற்றில் உள்ளது போன்ற வித்துவான் பள்ளிகளுக்கு அப்ளிகேஷன் கொடுத்தும் இடம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. தமிழ் வளர்ச்சி அடைந்து வரும் இந்த நாளில் திருச்சி போன்ற மத்திய இடங்களில் வித்துவான் கல்லூரியை ஆரம்பித்தால் மாணவர்களுக்கு அனுகூலமாக இருக்கும். ஆகவே, இதுபற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது தமிழாசிரியர்களைப் பயிற்றுவிக்க 14 தமிழ்க் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 14 தமிழ்க் கல்லூரிகளும் தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் சார்பாக எந்தத் தமிழ்க் கல்லூரியும் நடத்தப்படவில்லை. எங்காவது தனியார் தமிழ்க் கல்லூரியை